நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மைப் போன்ற மனிதரா ?

**“நபியே கூறுவீராக! நான் உங்களை போன்ற மனதின் தான் என்னளவில், உங்கள் கடவுள் ஒரே கடவுள் தான்”** என்று அறிவிக்கப்பட்டுள்ளது
அல்குர்ஆன் 16-110.

மக்கள் அனைவரும் அதிலும் குறிப்பாக காபிர்களும் நபி முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “மனிதர் தான்” என்று நம்புகின்றனர். அப்படியிருந்தும் மேற்கூறப்பட்ட ஆயத்து வசனம் **“நான் உங்களைப் போன்று மனிதர் தான்”** என்று அருளப்பட்டதின் தத்துவமென்ன? என்பதை இங்கு சற்று ஆராய்வோம்.

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தந்தை இல்லாமல் ஜனனமானது, மரணித்தவர்களை உயிர்ப்பித்து வாழ வைத்தது, பிறவிக்குருடர்களை கண் உள்ளவர்களாக மாற்றியது, பெரும் பெரும் வியாதிகளை எல்லாம் மருந்துகள் இல்லாமல் கை கொண்டு தடவுவது மூலம் சுகமாக்குதல் போன்ற மு.ஃஜிஸாத் - அற்புதங்களை அவர்கள் சமுதாயத்தினர் பார்த்ததும் இவர் அல்லாஹ்வின் குமாரராகத் தான் இருக்க வேண்டுமென நினைத்து இவர் அல்லாஹ்வின் குமாரர் என்று கூறினர்.

உஸைறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணித்து நூறு வருடங்களுக்குப் பின் உயிர் பெற்றெழுந்ததை பார்த்ததும் யூதர்கள் இவர் அல்லாஹ்வின் குமாரர் என்று சொன்னார்கள்.
தித்திக்கும் திருமறையாம் குர்ஆன் ஷரீபில் மலக்கு – அமரர்களை பெண்பாலாக – (மலாயிகத் என்பதாக) உபயோகிக்கப்படுவதால் “மலக்குகள் அல்லாஹ்வின் பெண் மக்கள்” என்று முஷ்ரிக்குகள் சொல்ல ஆரம்பித்தனர்.

இவை போன்ற இவைகளை விடவும் உயர்வான எண்ணற்ற மு.ஃஜிஸாத் (அற்புதங்) கள் நபிகள் கோமான் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் காணப்பட்டன.

வானுலகில் நீந்தி வரும் சந்திரனை தங்கள் திருக்கரத்தால் சமிக்ஞை செய்து இரண்டு துண்டாக பிளந்து காட்டினார்கள்.

மரங்கள் இவர்கள் அழைப்பிற்கிணங்கி இவர்கள் சமூகம் வந்தன!. சூரிய வெப்பம் தாக்கமலிருக்க, மேகம் இவர்கள் போகுமிடங்களுக்கெல்லாம் கூடவே சென்று குடை பிடித்தது.!

இவர்கள் திருக்கரங்களில் கற்கள் தஸ்பீஹ் (துதி) செய்தன!.

ஈத்த மரத்தால் செய்யப்பட்ட மிம்பர் ( பிரசங்க மேடை) இவர்களின் பிரிவால் அழுதது!

விரல்களிலிருந்து ஊற்றுக்கண் ஒலித்தோடியது.

தங்கள் தாய் தந்தையர்களான ஆமினா நாயகி, அப்துல்லாஹ் நாயகம் ரலியல்லாஹு அன்ஹுமா இவர்களையும் தோழர் ஹழரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களின் இரு பிள்ளைகளையும் உயிர்ப்பித்தல், காய்ந்தமரம் தளிர்த்தல், நோயாளிகள் இவர்களின் திருக்கரத்தால் தடவப்பட்டதும் சுகமாகுதல் இவை போன்ற எண்ணற்ற அற்புதங்களைக் காட்டினார்கள்.

இவைகளையெல்லாம் பார்த்து விட்டு முன் சென்ற சமுதாயத்தினர் சொன்னது போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுதாயத்தினரும் இவர்களை “அல்லாஹ்வின் குமாரர்” என்று சொல்லி விடக் கூடாதே என்பதற்காக “நபியே கூறுவீராக!. நான் உங்களைப் போன்று மனிதன் தான்“ (அல்லாஹ்வின் குமாரன் அல்ல) என்று அல்லாஹ் நபிகள் நாயகத்திற்கு மக்களிடம் சொல்லும்படி கட்டளையிட்டான்.
இதே கருத்துப்பட இமாம் அல்லாமா பூஸரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் புருதா ஷரீபில் நவின்றுள்ளார்கள்.
த.்.மத்த அத்ஹுன்னசாரா ..................................................”
நஸாரா(கிருத்துவர்) கள் தங்கள் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சம்பந்தமாக (குமாரர் என்று ) வாதித்ததை விட்டு விட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசயத்தில் நீ நாடிய புகழை சொல்லி நிறைவேற்றிக் கொள்! அவர்களுக்கு சிறப்பில் நின்றும் எவைகளை எல்லாம் சேர்க்க நாடுகின்றாயோ அவைகளை எல்லாம் சேர்த்துக் கொள்! ரஸுலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்பிற்கும் அந்தஸ்திற்கும் நிச்சயம் வரம்பில்லை வாயால் புகழ்ந்து தீர்த்து விட முடியாது”

யூதர்களும், கிருத்துவர்களும் தங்கள் தங்கள் நபிமார்களை வரம்பு மீறித் தகாத வார்த்தைகளை சொல்லி வழிகெட்டுப் போனார்கள். நாம் வரம்பிற்குள் இருந்து கொண்டு நம் உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எவ்வளவு புகழ இயலுமோ அவ்வளவு புகழலாம், புகழவும் வேண்டும்.

நாம் அவர்களைப் புகழ புகழ நமது கீர்த்தியும் சிறப்பும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இது நாம் கண் கூடாய் காணும் காட்சியுமாகும்.

மேற்கூறிய வசனத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை “அல்லாஹ்வின் குமாரர் என்று சொல்லாமல் “அப்துஹு வரஸுலுஹு

அவனின் அடியாரும் தூதருமாவார்” என்று தான் விசுவாசிக்க வேண்டுமென அழகுபட அல்லாஹ் சொல்லி விட்டான்.

மேலும் அவ்வசனத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹ்வே முன்னோக்கி “நீர் மற்ற மனிதர்களைப் போன்றவர் தான்” என்று சொல்லி விடாமல் “நீர் கூறுவீராக! (ஜனங்களே! நான் உங்களைப் போன்ற மனிதன் தான்” என்று மக்களிடம் சொல்லிக் கொள்ளுங்கள். நான் உங்களை சொல்வதற்கில்லை என்ற சமிக்ஞை “குல்” (கூறுவீராக!) என்ற பதத்தில் இருந்து தெரிய வருகின்றது.

மேலும் எல்லா நபிமார்களையும் அவர்கள் தம் பெயரைச் சொல்லியே (யா மூஸா, யா யஹ்யா, யா ஜகரியா, யா நூஹு போன்று) அழைக்கின்றான். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பெயர் சொல்லி (யா முஹம்மது யா அஹ்மது போன்று குர்ஆனில் எவ்விடத்திலும் அழைக்கவில்லை. கண்ணியத்தோடும், மரியாதையோடும் யாஅய்யஹன் நபிய்யு, யா அய்யுஹர் ரஸுலு , யா அய்யுஹல் முஸ்ஸம்மிலு” “ நபியே! தூதரே! “போர்வை போர்த்தியவரே” என்று சிறப்பு பெயர்களைக் கொண்டு தான் பல இடங்களில் அழைக்கின்றான்.

அல்லாஹ் தஆலாவே இவ்வளவு கண்ணியப்படுத்தியிருக்கும் போது நாம் எம்மாத்திரம்? அவர்களை சாதாரண மனிதர் என்று கூப்பிட (அஸ்த.்.பிருல்லாஹ்)

“அவர்களைச் சாதாரண மனிதர்” என்ற அடிப்படையில் மனிதர் என்று அழைப்பது ஹராமாகும். இழிவுக் கண்ணோடு கூறுவது குப்ராகும்
ஆதாரம் : பதாவா ஆலம் கீறி.

அல்லாஹுத் தஆலா கூறுகிறான் “வலா தஜ்ஹரூலஹு - பில் கௌலி– உங்களிற் சிலர் சிலரை இறைந்து சப்தமிட்டுக் கொள்வது போன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமூகத்திலும் சப்தமிட்டுக் கொள்ளாதீர்கள். நீங்கள் அறியாத வண்ணம் உங்கள் நற்கிரிகைகள் அழிந்து போய் விடும் அல்குர்ஆன் 49 –2

நற்கிரிகைகள் அழிவது காபிர்களுக்குத் தான். மு.்.மின்கள் நற்கிரிகைகள் ஒரு போதும் அழிந்து விடாது.

“அனுப்பிரமாண நன்மை செய்தால் அதைக் கண்டு கொள்வான். அணுப்பிரமாண தீமை செய்தால் அதையும் கண்டு கொள்வான் “
அல்குர்ஆன் 99- 7.

இதிலிருந்து தெரிய வருவதாவது –நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமூகத்தில் சப்தமிட்டு பேசினால், அல்லது அவர்களின் குரலைவிட

உரத்த குரலில் பேசினால், ஈமான் அறியாத விதத்தில் பறி போய் விடும். நற்கிரிகைகளும் அழிந்து போய் விடும். என்பதாகும்.

ஆகவே தனது தூதருக்கு மட்டும் தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்ள அனுமதித்திருக்கிறான். நாம் சொல்லிக் கொள்வதற்கில்லை. எனவே தான் நீர் கூறுவீராக! என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கிச் சொன்னான்.

இதே மாதிரி நம் பழக்க வழக்கங்களிலும் இருந்தே வருகின்றன. உதாரணமாக பேரரசன், ஜனாதிபதி, உயர் அதிகாரி, நீதிபதி, தாய், தந்தையர், கணவர் இவர்கள் அனைவரும் நம்மைப் போன்ற மனிதர்கள் தான். சந்தேகமில்லை. என்றாலும் இவர்கள் முன் அவர்கள் தம் பெயரை சொல்லிக் கூப்பிடுவது அவமரியாதையாகும். சில சமயம் இதனால் தண்டனையும் கிட்டி விடும்.

இது போன்றே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனிதராக இருந்தாலும் “மனிதர்” என்று சொல்வதினால் மரியாதை குறைவு ஏற்பட்டு தண்டனையும் கிட்டி விடும் என்று உணர்க!.

கண்ணியமிக்க அல்ஆலிமுல் பாழில் நூஹ் தம்பி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மேன்மைமிக்க அல்இமாம் அபுல்ஹஸன் ஷாதுலி நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் புகழ் மாலையில் கூறுகிறார்கள்.

ஸல்லல் இலாஹு அலாவாஹி தின்மை விளைத்திடும் வேதனையை விட்டும் காப்பாற்றிடும்

மனிதரான முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இறைவா! கருணை புரிந்திடுவாயாக! அவர்கள் மற்ற மனிதர்களைப் போன்றவரல்ல. இரத்தினகல்லைப் போன்றவர்கள். இரத்தினம் கல் இனத்தைச் சேர்ந்திருந்தாலும் இதர கல்லைப் போன்றதல்ல.

‘கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா?

இமாம் பூஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் புர்தா ஷரீபில் பாடியுள்ளார்கள்.
“வகைப யுத்ரிக்கு – பித்துன்யா - ஹகீகதஹு “ கனவில் பார்ப்பது கொண்டு மட்டுமே போதுமாக்கிக் கொள்ளும் கூட்டத்தினர் எப்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உள்ளமை – எதார்த்தத்தை அறிந்து கொள்வார்கள்?

வெளியரங்கமான இல்மை (அறிவைக்) கொண்டே வாதிடுபவர்களான அஞ்ஞான அறிவிலிகள் “நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது தான் அவர் மனிதர் தான்” என்று

அறிவார்கள், எதார்த்த தத்துவத்தை அறிவே தெரிந்து கொள்ள மாட்டார்கள். தெரிந்து கொள்ள முயற்சிக்கவும் மாட்டார்கள். மாறாக அவர் நம்மைப் போன்ற சாதாரண மனிதர் தான், நுபுவத்தினால் மட்டுமே அவருக்கு விசேஷம் கிட்டியது என்று பிதற்றித் திரிவார்கள் என்பது வெள்ளிட மலை!.

நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் நமக்கும் அனந்தம் அனந்தம் சுருதி (நகலிய்யத்) அடிப்படையிலும், யுக்தி (அகலியத்) அடிப்படையிலும் பாகுபாடு உண்டு என்பதை அடுத்து காணுவோம்.

சுருதி (நகலிய்யத்) அடிப்படையில்

1) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் நாமும் சொல்லி கலிமா ஷஹாதத்தில் வித்தியாசம் : நாம் சொல்வது "அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு - முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயம் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார்கள் என்று நான் சாட்சி சொல்கிறேன் என்பதாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்வது போன்று நாம் சொல்ல முடியாது. அப்படி யாரும் சொன்னால் தன்னை நபி தூதர் என்று சொன்னவனாகி காபிராகிவிடுவான்.

2) இஸ்லாம் ஐந்து காரியத்தின் மீது அமைக்கப்பட்டது 1) ஷஹாதத்து (சாட்சி பகருதல்) 2) தொழுகை 3) ஜகாத் 4) நோன்பு 5) ஹஜ்ஜு நமக்கு இவ்வைந்தும் கடமை ஆனால் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இஸ்லாத்தின் கடமை நான்கு தான். பொருள் இருந்தாலும் ஜகாத் கடமையில்லை.
(ஆதாரம் : ரத்துல் முஹ்தார்)
3) தூக்கம் நமது உளுவை முறித்து விடும். நாயகத் திருமேனி ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தூக்கம் உளுவை முறிக்காது. அவர்கள் கண்கள் தூங்கினாலும் உளம் தூங்காது. எனவே உளு முறியாது.
4) நமக்கு ஐவேளைத் தொழுகை கடமையாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறு வேளை தொழுகை கடமையாகும். மேற்கூறிய ஐந்தும் "தஹஜ்ஜுது" தொழுகையுமாகும்.

"பதஹஜ்ஜத் பிஹி – நாபிலத்தன் - லக் - (நபியே!) தஹஜ்ஜுத் தொழுகை தொழுகவும். இது உமக்கு அதிகமாகும். "மற்ற உமது உம்மத்தார்களுக்கு கடமை இல்லை." (அல் குர்ஆன் 17-79)

5) நாம் நான்கு மனைவிமார்களை விட அதிகமானவர்களை ஒரே சமயத்தில் திருமணம் செய்து கொள்ள அனுமதி இல்லை. ஆனால் நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்கள் விரும்பிய பெண்களை எல்லாம் (நான்கை விட அதிகமானாலும்) திருமணத்தில் வைத்துக் கொள்ளலாம்

“நீர் அவர்களில் (மனைவிமார்களில்) நின்றும் நாடியவர்களை விட்டு விடுவீர். நீர் நாடியவர்களை உம்மளவில் சேர்த்துக் கொள்வீர் (அல்குர்ஆன் 33-50)

சரியான சொல்லாகிறது :- ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம அவர்கள் மரணமாகும் வரை இதே சட்டம் தான் இருந்தது என்று இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நவின்றுள்ளார்கள்.
ஆதாரம் : மிர்காத் ஷரஹ் மிஷ்காத்

6) உம்முஹாத்துல் மு.ஃ.மினீன் (விசுவாசிகளின் தாய்மார்) களான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவிமார்களை வபாத்திற்குப் பின் உம்மத்துமார்களில் எவரும் மறுமணம் செய்து கொள்ள அனுமதியில்லை.
ஆனால் நாம் மரணித்து விட்டாலோ நம் மனைவிமார்களை முஸ்லிமான வேறு சகோதரர் மறுமணம் செய்து கொள்ளலாம்.
“வலா அன்தன்கிஹு அஸ்வாஜுஹு மின்ப.ஃ.திஹி அபதா” (விசுவாசிகளே. முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தான் மிக மேலானவர்கள் அவர்களின் மனைவிமார்கள் இவர்களின் தாய்மார்கள்.
(அல்குர்ஆன் 33:6)

இதன்படி நம் தாய்மார்களான அவர்களை எப்படி நாம் கலியாணம் முடித்துக் கொள்ள முடியும்.
7) நாம் மரணித்து விட்டால் நம் சொத்து ஆஸ்திகள் அனைத்தையும் நம் அனந்தரக்காரர்கள் பங்கீடு செய்து கொள்வார்கள். இது தான் நியதி. ஆனால் ரஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொத்துக்கள் அவர்களின் அனந்தரக்காரர்களுக்கு கிடைக்காது. அவை அனைத்தும் எல்லா முஸ்லிம்களுக்கும் சொந்தமானதாகும்.

“நபிமார்களான நாங்கள் (எவரையும்) அனந்தரகாரர்களாக ஆக்க மாட்டோம். நாங்கள் விட்டுச் சென்றவை ஸதகா – தருமமாகும், என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள்.
(ஆதாரம் - ரூஹுல் பயான்)

8) சரீஅத்தின் சட்ட திட்டங்கள் :-
முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாவில் இருக்கின்றன. அவர்களின் தகை மிகு நாவில் இருந்து எது வெளிவருகின்றதோ அது தான் ஷரீஅத் சட்டம் நாமோ அவர்களின் முபாரக்கான நாவிலிருந்து வெளியாகின்றதை எதிர்பார்த்து அதற்கு வழிபடுவதை கடமையாக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். உதாரணமாக தீர்ப்பு வழங்கிட இரண்டு சாட்சியாளர்கள் குறைந்த பட்சம் வேண்டும். இது

தான் சரீஅத் பொதுச்சட்டம். ஆனால் ஒரு சமயம், ஒரு விசயத்தில் தீர்ப்பளிக்க இரண்டு சாட்சிகள் தேவைப்பட்டது. அபூஹுஸைமா ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் மட்டும் ஒரு சாட்சியாளராக இருந்தார்கள். இவர்களை மட்டும் வைத்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீர்ப்பளித்து விட்டு இது அபூஹுஸைமாவுக்கு மட்டும் சொந்தம் என்று நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் நாவில் வந்ததுவே சட்டமாகி விட்டது. இரண்டு சாட்சியாளர்கள் தேவையல்லவோ என்று ஆட்சேபணை செய்ய இடமில்லை. அவர்கள் நாவில் வருவது தானே ஷரீஅத்!.

9) அதைப்போன்று முஸ்லிமான ஒருவர் நான்கு மனைவிகள் வரை ஒரே காலத்தில் கல்யாணம் முடிக்கலாம் என்பது ஷரீஅத் பொதுச் சட்டம்.

ஆனால் நபியின் அருமை மகளான அன்னை பாத்திமா நாயகி ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அமீருல் மு.ஃமினீன் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவியாக ஜீவித்திருக்கும் போது, வேறு எந்த பெண்ணையும் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மணமுடிக்கலாகாது என்று ஹராமாக்கி தடுத்து விட்டார்கள்.

இச்சட்டம் ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு மட்டும் சொந்தமான சட்டம். இவ்வாறாக அவர்கள் நாவில் ஷரீ அத் சட்டம் இருக்கின்றது. நாம் அதற்கு முற்றிலும் வழிப்பட்டு நடக்க கடமையாக்கப் பட்டிருக்கிறோம்.

10) நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலம் அவாகள் ஒரு சமயம் தொடர்ந்து எதுவும் உண்ணாமல் நோன்பு நோற்றியிருந்தார்கள். அதுசமயம் அவர்களின் தோழர்களும் தொடர் நோன்பு நோற்க ஆரம்பித்தார்கள். இதைக்கண்டதும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலம் அவர்கள் தொடர் விரதத்தை தடுத்து விட்டார்கள். அதுபோது ஓர் மனிதர் தாங்கள் தொடர் விரதம் கொள்கிறீர்களே என்று கேட்டார். அப்போது ஹபீபுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலம் அவர்கள் தோழர்களை முன்னோக்கிச் சொன்னார்கள் :- “உங்களில் யார் எனக்கு நிகரானவர்கள்? என்னைப் போன்றவர் யார்? எனக்கு எனது இரட்சகன் உணவளிக்கிறான் குடிப்பாட்டுகிறான்” (அல்ஹதீஸ்மிஷ்காத்) அவர்களைப் போன்று உம்மதத்தினர்கள் எதும் உண்ணாமல் குடிக்காமல் தொடர்ச்சியாக நோன்பு நோற்கக்கூடாது என்றும், அவர்களுக்கு எவரும் நிகராக மாட்டார்கள் என்றும் தெள்ள தெளிவாகத் தெளிவாகத் தெரிய வருகின்றது.

11) தாஹா நபிஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸலம் அவர்கள் நீண்ட நேரம் இராத்தொழுகை தொழுது கொண்டிருக்கும் போதுஇ சஹாபாக்களை நோக்கிச் சொன்னார்கள். “உங்களில் யாரைப் போன்றும் நானல்ல” (அல்ஹதீது)” மேற்கூறியவைகளிலிருந்து முஹம்மது நபிஸல்லல்லாஹு

அலைஹிவஸ்ஸலம் அவர்கள் சுருதி (நகலிய்யத்) அடிப்படையிலும் நம்மைப் போன்று சாதாரண மனிதரல்ல என்றும் அழகுற தெரிய வந்து விட்டது.

யுக்தி அகலியத் அடிப்படையில்

1. முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹுஅலைஹிவஸ்ஸலம் அவர்கள் இறைவனையும் சுவர்க்கத்தையும், நரகத்தையும் மற்றும் மறைவான விஷயங்களையும் கண்ணுற்று, ஈமான் கொண்டார்கள். அவர்கள் ஈமான் ஹக்குல்யகீன் (சந்தேகத்துக்கு கிஞ்சிற்றும் இடமில்லாது மிக்க உறுதி வாய்ந்தது. ) அறிவு கெட்ட சில மௌலவிகள் இறை நம்பிக்கையில் ஆட்டம் காணும் என்று கூறுவது போன்றல்ல. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னபடியே நாம் கண் கொண்டு பார்க்காவிடினும் நம்பி விசுவாசித்திருக்கிறோம். நம் ஈமான் இல்முல்யகீன். (அறிவால், சிந்தையால் அறிந்து சந்தேகமின்றி ஆட்டம் காணாது உறுதி கொண்டிருப்பது).
நமது ஈமானிலேயே - இறை நம்பிக்கையிலேயே ஆட்டம் காணக்கூடாது என்று இருக்கும் போது நம் ஈமானை எல்லாம் உறுதிப்படுத்துவதற்காக வந்தவதரித்த வள்ளல் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இறை நம்பிக்கையும் ஆட்டம் கண்டு விடலாம் அல்லவா? இது நபிமார்களுக்கு ஏற்பட்ட இயல்பு தான் என்று சவால் போடும் அறிவிலிகளை விட வழிகேடர்கள் உண்டோ? (மஆதல்லாஹ்) நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈமானுக்கும் நமது ஈமானுக்கும் மத்தியிலேயே இவ்வளவு வித்தியாசம் வந்து விட்ட பொழுது நாமும் அவர்களும் ஒன்றாவோமா?

2) மனித கோடிகள் அனைவரும் இவ்வுலகிற்கு தோன்றுவது மங்கையர்களின் மறைவிடமான அபத்தின் வழியாகத் தான் பிறப்பது உலக நியதி. இறையோன் அமைத்த வழக்கமும் அதுவே.
ஆனால் அப்பழுக்கற்ற தூயவர்களான நபிமார்களை அசுசியான அபத்தின் வழியாக அவதரிக்கச் செய்வதில்லை. அல்லாஹ்
அபத்திற்கும், தொப்பிளுக்கும் இடையில் ஒரு வழியை ஏற்படுத்தி அவ்வழியே பிறக்கச் செய்து அவ்வழியாக உடனடியாக மூடி விடுவான்.
ஆனால் நபிமார்களுக்கெல்லாம் அரசராய் குவயத்திற்கு குன்றா விளக்காய், அருட்பிழம்பாய் அவதரித்த அண்ணல் பூமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இடது விலா எலும்பிற்கு கீழுள்ள இடுப்பிலிருந்து உதயமாக்கி உடனடியாக அவ்வழியை (அன்னை ஆமினா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் உணரா வண்ணம் ) அடைத்து விட்டான் ஏக இறையோன் என்று அல்லாமா தில் முஸானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அருமையாகச் சொல்லியிருக்கிறார்கள்.

எனவே நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அபத்தின் வழியாக பிறந்தார்கள் என்று கூறும் கூற்று உதவாக்கரை என்றும் இப்படி எவனாவது சொன்னால் அவனை வெட்டி விட வேண்டுமென்று தெரிய வருகின்றது (ஆதாரம் : நிஹாயத்துல் - அமல்)

இப்படி உன்னதமான வழியின் மூலம் உதித்த உத்தமரும் அசுசியான அபத்தின் வழியாக பிறந்த நாமும் ஒன்றா? நிகராக முடியுமா ? என்னே!. இதற்கு மாறாக சொல்லித் திரியும் பித்தர்கள் போக்கு!.

நாம் உட்கொள்ளும் உணவுப் பொருட்கள் கழிவுப் பொருட்களாக மாறி வெளியாகி விடுகின்றன நமது மலமும் ஜலமும் அசுத்தமானவை அறுவெறுக்கத்தக்கவை.

ஆனால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்கொள்ளும் உணவு இறையொளியாக மாறிவிடுகின்றது. அவர்களின் மலமும், ஜலமும் பரிசுத்தமானவை. வாசனைத் திரவியமாகும்!. மதிக்கத்தக்கதாகும். புண்ணியத்திற்குரியதாகும்.

மௌலானா அல்லாமா ஜலாலுத்தீன் ரூமி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மஸ்னவி ஷரீபில் நவின்றுள்ளார்கள்.

ஈன் - குரத் - கர்த்தபளீ தீஜீஜுதா ஆன் - குரத் - கர்தத் - ஹம – நூரே குதா.

“இவன் (மனிதன்) சாப்பிடுகிறான். அது அசுத்தமான கழிவாக வெளியாகிறது. அவர்கள் (முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) சாப்பிடுகிறார்கள். அது இறைவனின் ஒளியாகி விடுகின்றது.

இதற்கு உதாரணம் : கஸ்தூரி மானும் - சாதாரண மானும், தேனியும் - குளவி வண்டுகளும், புனுகுப் பூனையும் - வீட்டுப் பூனையும், ஒரே இடத்தில் ஒரே உணவை உட்கொள்கின்றன. ஆனாலும்

கஸ்தூரி மானிலிருந்து மணம் கமழும் கஸ்தூரியும், தேனீயிலிருந்து தெவிட்டாத மதுரமான தேனும், புனுகுப் பூனையிலிருந்து புனுகும் வெளியாகின்றன.

ஆனால் சாதாரண மானிலிருந்து அசுத்தமான மலமும், குளவி வண்டுகளிலிருந்து நஞ்சும், வீட்டுப் பூனையிலிருந்து அசுத்தமான கழிவுப் பொருளும் வெளியாகின்றன.

இனங்கள் ஒற்றுமையாக இருப்பினும், பாகுபாடு உண்டு என்பதை மேலே அறிந்தீர்கள். அது போன்றே மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விஷயத்திலும் உணர்க

4) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உலகத்தாருக்கு அருளாக அவதரித்தார்கள்.
“நாம் உம்மை உலகத்தாருக்கு அருட்பிழம்பாகவே – யன்றி அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 21-107)

நாமோ அவர்களின் அருளிலிருந்து உண்டானவர்கள். அவர்கள் இட்ட பிச்சையினால் வாழ்பவர்கள் தான் நாம்.
அல் இமாம் அல்லாமா பூஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் புர்தா ஷரீபில் அழகுபடக் கூறினார்கள்.

“வஇன்ன மின் ஜுதிகத் துன்யா“
“நாயகமே! உங்கள் அருளிலிருந்து தான் இவ்வுலகமும் இவ்வுலகத்திற்கு மாற்றமான மறு உலகமும் உண்டாகியருக்கின்றன. (உலகில் நடைபெறும் சர்வ காரியங்களைப் பற்றி வரையப்பட்ட) லவ்ஹு கலமிலுள்ள அறிவு (இல்மு) கள் எல்லாம் உங்கள் அறிவுகளின் சில பகுதிகள்.

நாம் உலகில் வந்திருப்பதும், நாம் வாழ்ந்து கொண்டிருப்பதும், மறுமையில் நாம் ஈடேற்றம் பெறுவதும், நம் பாவ பிணிகள் நீக்கப்படுவதும் எல்லாமுமே முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கருணையால் தான்! அவர்கள் தயை இல்லையானால் ஒன்றும் கிடைக்காது.

“ஹாக - ஹதீத – அன – மின் நூரில்லாஹி – கதா அல்லாஹு யு.ஃ.தி – அனல் காஸிம் - குதன் பிஹிமா

அல்லாஹ்வின் நூராலேயான் - எல்லாம் என் நூரில் நின்றும், அல்லாஹ் கொடுக்கிறான், யான் வினியோகம் செய்வனேனும்

இரண்டு ஹதீதின் படி எல்லா சிருஷ்டிகட்கும்
அவற்றின் உஜுதை நபி மன்றாடியே கொடுத்தார்
பின்னர் அவைகளுக்கு வேண்டிய இரணமீந்து
எல்லாம் அவர் பொருட்டால் உண்டாகி நிலைக்கச் செய்தார்.

எனவே எதிலிருந்து எதற்காக எப்பொழுது எங்கெங்கு போகுமென எல்லாமவரறிவார்
அல்லாஹ்வின் அறிவுக்கு இது சமமாகா – அவனறிவு
சுயமான எல்லையற்ற பூர்வமானதுவாம்.

என்று எங்கள் குருநாதர் ஸூபி ஹழ்ரத் சித்தீகி காஹிரி (ஸல்லமஹுல்லாஹு வமத்த லில்லாஹுல் ஆலி) அவர்கள் அழகுபட அரபியிலும் அதன் மொழிபெயர்ப்பை தமிழிலும் பாடியுள்ளார்கள்.

இப்படியெல்லாம் இருக்க இகபர நல்வாழ்வை வழங்கும் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் நாமும் சமமாகுவோமா?

5) வெயில் வெப்பம் அவர்களின் புனித மேனியில் தாக்காமல் தடுப்பதற்காக மேகம் நிழலிட்டது. நம்மில் எவர்க்கேனும் இப்படியுண்டா?இல்லையே! பின் எப்படி சமமாவார்கள். ?

6) தாயின் வயிற்றில் இருக்கும்போதே லவ்ஹுல் மஹ்பூழில் எழுதப்படும் பேனாவின் ஓசையை அண்ணல் அஹ்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாம் உலகில் பிறந்த பின்பும் கூட கேட்பதில்லையே!. நாமும் அவர்களும் ஒன்றா ?

7) நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறக்கும் போதே அல்லாஹ்வை அறிந்தவர்களாக (ஆரிபுல்லாஹ்வாக) பிறந்தார்கள். நாமோ பிறந்து பருவமெய்திய பின்பு அல்லாஹ்வை அறிகின்றோம். என்றாலும் அவர்கள் அறிந்த அளவிற்கு நாம் அறிவதில்லை. பின் எங்ஙணம் நம்மைப்போன்ற மனிதராவார்கள்?

8) நூரு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளியா(லா)னவர்கள். திரையின்றிப் பார்க்க முடியாது. உதாரணமாக! சூரியனை எவ்வாறு திரையின்றி பார்க்க முடியாதோ அது போன்றே முஹம்மது முஸ்தபா ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் “பஷரியத்“ என்ற திரையின்றி பார்க்க முடியாது.

எனவே தான் அவர்கள் வெயிலில் நின்றாலும் நிழல் விழாது. இருளில் இருந்தாலும் ஒளிமயமாக இருப்பார்கள். அவர்கள் மாசு மருவற்ற தூய்மையான நூரான (ஒளியான) வர்கள்.

“அல்லாஹ்விடமிருந்து உங்களுக்கு நூர் – ஒளியும், துலாம்பரமான வேத நூலும் வந்திருக்கின்றன”
(அல் குர்ஆன் 5-15)

இவ்வசனத்தில் கூறப்பட்ட நூர் (ஒளி) என்பது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே தான்.
இருள் கப்பியவர்களும் ஒளி மிக்கவர்களும் சமமானவர்களா?
9. எவர்கள் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிபட்டார்களோ அவர்கள் நிச்சயம் அல்லாஹ்வுக்கு வழிபட்டவர்களே தான்.
“வமன் யுதியுற் றஸூல பகத் அதா அல்லாஹ் (அல்குர்ஆன் - 4:80)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழிபடுவதே அல்லாஹ்வுக்கு வழிபடுவதாகும்.
இந்நிலையில் நாமும் அவர்களும் ஒன்றாகுவோமா?

10. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மூன்று நிலைமைகள் உண்டு. முதலாவது பஷரிய்யத் - மனிதத்துவம் இந்நேரத்தில் நான் உங்களைப் போன்று மனிதன் " என்று சொல்வார்கள். இரண்டாவது – மலக்கியத் - அமரத்துவம் - "இந்நேரத்தில் "எனக்கு அல்லாஹ் தஆலாவுடன் ஒரு நேரமுண்டு. எந்த நெருக்கமான மலக்கும், முர்ஸலான (தூதுவரான) நபிக்கும் விசாலமாக முடியாது" என்று கூறுவார்கள்.

மூன்றாவது "ஹக்கானியத் " இறைத்துவம். இந்நேரத்தில் "என்னை எவர்கள் பார்க்கின்றார்களோ அவர்கள் அல்லாஹ்வை நிச்சயம் பார்த்து விட்டார்கள்" என்று சொல்வார்கள்.
(ஆதாரம் :- ரூஹுல் பயான் )

11. நாம் தொழுது கொண்டிருக்கும் போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நம்மைக் கூப்பிட்டால் உடனே பதில் அளிக்க வேண்டும். அவர்கள் திருச்சமூகம் ஆஜராகி என்ன வேலையைப் பணிக்கின்றார்களோ அவ்வேலையை முடித்து விட்டு (கிப்லா அல்லாத திசைக்கு திரும்பி போனாலும் சரியே) விட்டுச் சென்ற தொழுகையை விட்டதிலிருந்தே தொடர்ந்து தொழுதாலும் தொழுகை சரியாக நிறைவேறி விடும். (ஆதாரம் : பிக்ஹு நூல்கள்).

அண்ணல் எங்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கிப்லாவுக்கு கிபுலாவாக இருக்கும் போது அவர்களைப் பார்ப்பதும், அழைப்பிற்கு அடிபணிவதும், அவர்கள் பணித்திடும் காரியங்கள் அனைத்தும் இறை வணக்கமாகவே இருக்கும் போது எப்படி தொழுகைக்கு பங்கம் வரும்?

"யா அய்யுஹல்லதீன ஆமனுஸ் தஜீபுலில்லாஹி வலிற் றஸூலி இதா தஆக்கும் " மெய் விசுவாசிகளே!. அல்லாஹ்வும் அவன் தூதரும் அழைத்தால் பதில் கொடுங்கள் ( அல் குர்ஆன் 8-24)

இறைவனுக்காக மட்டும் வணங்கப்படும் தொழுகையில் கூட நாயகத்திருமேனி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மனதில் ஆஜராக்கி முன் நிறுத்தி "அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் னபிய்யு" என்று சலாம் சொல்ல வேண்டுமென கல்விக் கடல் இமாமுனா கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் மற்றவர்களும் சொன்னதுவும் இதே அடிப்படையில் தான். (நம் அருபெரும் கண்ணியத்திற்குரிய இமாம்களுக் கெல்லாம் மாற்றமாக மௌலவி இஸ்மாயில் திஹ்லவி என்பவர் தன்னுடைய "ஸராத்தே முஸ்தகீம்" என்ற நூலில் 82வது பக்கத்தில்)

தொழுகையில் ஷெய்கு அவர்கள் போன்ற பெரியார்கள். ரஸுல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களானாலும் சரி இவர்களுடைய ஞாபகம் வருதானது மாடு, கழுதையுடைய ஞாபகத்தில் மூழ்குவதை விடவும் மிகக் கெட்டதாகும் என்று (மஆதல்லாஹ்) என்னே அவரின் வழிகேடு! அவர்தம் கொள்கையை சம்மதிப்பவர்களின் மதியீனம்!

ஆகவே, நம்முடைய யுக்தி ஆராய்ச்சி அடிப்படையிலும், (ஷரீஅத் சுருதி அடிப்படையிலும்) நாமும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சமமல்ல என்பதும் நம்மைப்போல் மனிதருமல்ல என்பதும் தெள்ளத் தெளிவாகிவிட்டது!

மிதுலுக்கும்................

மிதுலுக்கும்........ (உங்களைப் போன்று) என்பதின் கருத்தாவது, “ஜனங்களே! நீங்கள் எவ்வாறு அல்லாஹ்வாக இல்லாது அவனின் அடியார்களாக இருக்கின்றீர்களோ அது போன்றே நானும் அல்லாஹ் அல்ல! அல்லாஹ்வின் குமாரனும் அல்ல! நான் அல்லாஹ்வின் அடிமைதான்” என்பதாகும்.

அத்தோடு, என்னளவில் வஹி அறிவிக்கப்படுகின்றது. நான் அல்லாஹ்வின் தூதன், நீங்கள் எனக்கு வழிப்பட்டு நடக்க வேண்டும் என்பதுமாகும்.

ஆகவே நமது உயிருக்கும் உயிரான சர்தாரே தோஆலம், முஹம்மது முஸ்தபா, அஹ்மது முஜ்தபா ஷபீவுல் முத்னிபீன், ரஹ்மதுன்லில் ஆலமீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி நம் சிந்தனையில், செயலில், சொல்லில், கிரியைகளில் அவர்கள் சாதாரண நம்மைப்போன்ற மனிதர் என்ற எண்ணம் - நினைப்பு வராமல் நம் ஈமானைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நம் உள்ளத்தில் உயிரில், உதிரத்தில் தசையில் நாடி நரம்புகளில் அவர்களின் கண்ணியம், புண்ணியம், மரியாதை அவர்கள் உவப்பு உறைந்து இரண்டறக்கலந்து விட வேண்டும்! எல்லாம் வல்ல அல்லாஹ் அதற்கு நல்லருள் புரிவானாக!

இறைவா! உண்மையை உண்மையாக எங்களுக்கு காட்டி, அதை பின்பற்றி நடப்பதற்கும் அசத்தியத்தை அசத்தியமாக காட்டி, அதை தவிர்ந்து நடப்பதற்கும் அருள் புரிவாயாக! அரஹமர்ராஹிமீனே! யாரப்பல் ஆலமீனே!